Koviloor Digital Library

அண்ணாமலை மாலை

தொகுப்பு:
ராய. சொ.

ஹிந்துமதாபிமான சங்கம்
ஓம்
காரைக்குடி

விசுவநாதன் திருமண வெளியீடு
குரோதி, ஆனி, கரு. 29-6-64

IMS0713

சா. நா. அ. செ... அ.
காரைக்குடி.

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

சிவமயம்

அண்ணுமலை மாலை

நூல்முகம்

இவ் அரிய நூல், திருவண்ணுமலைப் பெருமானைப் பாடிய ஐம்பத்தொரு பாக்கள் கொண்டது. எனவே இதற்கு ''அண்ணுமலை மாலை'' எனப் பெயர் தந்திருக்கிறது. தவிர இதனை வெளியிடுபவர் அண்ணுமலை அண்ணலின் பெயர் கொண்டவர்.

இம்மாலை, மணிவாசகப்பெருமான் திருவாசகத்திலுள்ள மலர் இரண்டும், சம்பந்தமூர்த்திகள் தேவாரத்திலுள்ள 'பூ' பத்தும், அப்பர் அடிகள் தேவாரத்திலுள்ள இதழ் பதினைந்தும், சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராண அலர் ஆறும், வில்லிப்புத்தூராழ்வார் பாரத மலர் ஒன்றும், குகை நமச்சிவாயர் தனி வெண்பா இரண்

Koviloor Digital Library

டும், குருநமச்சிவாயர் அருணகிரி அந்தாதி, அண்ணுமலை வெண்பா இதழ் பதின்மூன்றும். சைவ எல்லப்ப நாவலர் அருணசலப் புராண அலர் இரண்டும் ஆக ஐம்பத்தொரு பூக்களால் தொடுக்கப்பெற்றது.

பாடலனைத்தும் அண்ணுமலையான் அடிக் கமலம் சென்று இறைஞ்சும் அரிய பாடல்கள். இந்நூலிலுள்ள ஐம்பத்தொரு பாடல்களில் ஒன்று முதல் முப்பத்தொரு பாடல்களிலும், முப்பத்தொன்பது முதல் நாற்பத்து ஒன்பது பாடல்கள் வரையிலும், ''அண்ணுமலை'' என்ற சொல் வருகின்றது. எஞ்சிய ஒன்பது பாடல் களில், முப்பத்து நான்கு, முப்பத்து எட்டு ஆகிய பாடல் இரண்டிலும் ''அருணசலம்'' என்ற பெயரும், முப்பத்து ஐந்து, ஐம்பத்து ஒன்று ஆகிய பாக்கள் இரண்டில், ''அருணகிரி''என்ற பெயரும், முப்பத்து ஆறில் ''சோணசலம்'' என்ற பெயரும், முப்பத்து ஏழில் ''சோணகிரி'' என்ற பெயரும், ஐம்பதில் ''அருணை'' என்ற பெயரும், பயின்று வருகின்றன; இவ்வனைத்தும்

Koviloor Digital Library

அண்ணுமலேயைக் குறிப்பனவே. முப்பத்து இரண்டு, முப்பத்து மூன்று ஆகிய பாடல் இரண்டும் கதைத்தொடர்பு கருதி, மேற்பாட்டில் உள்ள அண்ணுமலேயைச் சுட்டி நிற்கின்றன.

இவ் அரிய நூலே, என் அருமை மிக்க நண்பர்— என் மாணுக்கர் — என்பால் பேரன்பு கொண்டவர்—செல்வத்துப்பயன் ஈதலே என்பதை உணர்ந்தவர்—தெய்வபக்தி நிறைந்தவர்— நல்லறம் எதற்கும் ஒசைப்படாமல் கொடுத்து மகிழும் இயல்பினர், சா. நா. அ. சொ. அண்ணுமலேயார் தமது மைந்தன் விசுவநாதனின் திருமணத்தில் வெளியிட்டுப் புகழ் பெறுகின்ருர். அவருக்கு வாழ்த்து.

அன்பர்கள் இந்நூலேப் படித்துப் பயன் அடைவாராக. நூல் வெளியீட்டுக்குக் காரணர்களாக இருந்த மணமக்கள் எல்லா நலனும் பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க!

ராய. சொ.

Koviloor Digital Library

Koviloor Digital Library

அண்ணாமலை மாலை

Koviloor Digital Library

Koviloor Digital Library

அண்ணு மலையான்
அடிக்கமலம் சென்றுஇறைஞ்சும்
விண்ணேர் முடியின்
மணித்தொகை,வீறு அற்ருல்போல்
கண்ணுர் இரவி
கதிர்வந்து கார்கரப்ப,
தண்ஆர் ஒளிமழுங்கித்
தாரகைகள் தாம்அகல,
பெண்ஆகி ஆணுய்
அலியாய்ப் பிறங்குஒளிசேர்
விண்ஆகி மண்ஆகி,
இத்தனையும் வேறுஆகி,
கண்ஆர் அமுதமுமாய்
நின்ருன் கழல்பாடி,
பெண்ணே!இப் பூம்புனல்பாய்ந்து
ஆடேல்ஓர் எம்பாவாய்!
—மணிவாசகர்

மணித்தொகை: இரத்தினக் கூட்டம். வீறு: சிறப்பு.
கரப்ப: மறைக்க. தாரகை: நட்சத்திரம்.

Koviloor Digital Library

விண் ஆளும் தேவர்க்கும்
மேலாய வேதியனை,

மண் ஆளும் மன்னவர்க்கும்
மாண்பாகி நின்றானைத்

தண் ஆர் தமிழ்அளிக்கும்
தண்பாண்டி நாட்டானைப்

பெண் ஆளும் பாகனைப்
பேணு பெருந்துறையில்

கண் ஆர் கழல்காட்டி
நாயேனை ஆட்கொண்ட

அண்ணா மலையானைப்
பாடுதும்காண் அம்மானாய்.

—மணிவாசகர்

தண்: குளிர்ச்சி. பேணுதல்: விரும்புதல்.
பெருந்துறை: ஆவுடையார் கோயில்.

Koviloor Digital Library

உண்ணாமுலை உமையாளொடும்
உடன்ஆகிய ஒருவன்

பெண்ஆகிய பெருமான்மலை,
திருமாமணி திகழ

மண்ஆர்ந்தன அருவித்திரள்
மழலைம்முழவு அதிரும்

அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே.

—சம்பந்தர்

திருமாமணி : அழகிய சிறந்த இரத்தினம்.
மண் ஆர்ந்தன: பூமியில் நிறைந்தன.
மழலைம்முழவு: குதலைச்சொல் போன்ற மத்தளம்.
அறும்: நீங்கும்.

Koviloor Digital Library

தேமாங்கனி கடுவன்கொள
விடுகொம்பொடு தீண்டித்

தூமாமழை துறுவல்மிசை
சிறுநுண்துளி சிதற

ஆமாம்பிணை அணையும்பொழில்
அண்ணாமலை அண்ணல்

பூமாங்கழல் புனைசேவடி
நினைவார்வினை இலரே.

—சம்பந்தர்

கடுவன்: ஆண்குரங்கு. துறுவல்: பாறை. ஆமா: காட்டுப்பசு, பிணை: பெண். பூமாகழல்: மலர்போன்ற சிறந்த வீரச்சிலம்பு.

Koviloor Digital Library

பெருகும்புனல் அண்ணாமலை
பிறைசேர்கடல் நஞ்சைப்

பருகுந்தனை துணிவார்பொடி
அணிவாரது பருகிக்

கருகும்மிடறு உடையார்கமழ்
சடையார்கழல் பரவி

உருகும்மனம் உடையார்தமக்கு
உறுநோய்அடை யாவே.

—சம்பந்தர்

பிறை: திங்கள். பொடி: திருநீறு. அதுபருகிக் கருகும், மிடறுஉடையார்: அந்த நஞ்சைக் குடித்து, கறுத்த கழுத்தையுடைய சிவபெருமான்.

Koviloor Digital Library

விளவார்கனி படநூறிய
கடல்வண்ணனும் வேதக்

கிளர்தாமரை மலர்மேலுறை
கேடில்புக ழோனும்

அளவாவணம் அழலாகிய
அண்ணமலை அண்ணல்

தளராமுலை முறுவல்உமை
தலைவன்அடி சரணே.

—சம்பந்தர்

விளவார்கனி: விளாம்பழம். படநூறிய: விழஎறிந்த. கடல் வண்ணன்: திருமால். கேடில்புகழோன்: பிரமன். அளவாவணம்: எட்டமுடியாமல். அழல்: நெருப்பு. தளராமுலை: உண்ணமுலை. முறுவல்: பல்.

Koviloor Digital Library

வெம்புந்திய கதிரோன்ஒளி
விலகும்விரி சாரல்

அம்புந்திமு எயில்எய்தவன்
அண்ணுமலை அதனைக்

கொம்புந்துவ குயிலாலுவ
குளிர்காழியுள் ஞான

சம்பந்தன தமிழ்வல்லவர்
அடிபேணுதல் தவமே.

—சம்பந்தர்

வெம்புந்திய: வெப்பத்தைத் தருகின்ற. அம்புஉந்தி: கணையை ஏவி. முஎயில்: முப்புரம். கொம்புஉந்துவ குயில்ஆலுவ: கொம்பில் நின்றும் குயில்கள் கூவும். காழி: சீர்காழி சம்பந்தன: சம்பந்தருடைய.

Koviloor Digital Library

பூவார் மலர்கொண்டு அடியார்
தொழுவார்; புகழ்வார் வானோர்கள்;

மூவார் புரங்கள் எரித்த
அன்று மூவர்க்கு அருள்செய்தார்;

தூமா மழைநின்று அதிர
வெருவித் தொறுஇன் னிரையோடும்

ஆமாம் பிணைவந்து அணையும்
சாரல் அண்ணா மலையாரே.

—சம்பந்தர்

தூமா: பரிசுத்தமான சிறந்த. வெருவி: அஞ்சி, தொறு இன்னிரை: இனிய பசுக்கூட்டம். ஆமா: காட்டுப் பசு.

Koviloor Digital Library

இழைத்த இடையாள் உமையாள்
பங்கர்; இமையோர் பெருமானுர்;

தழைத்த சடையார்; விடைஒன்று
ஏறித் தரியார் புரமெய்தார்;

பிழைத்த பிடியைக் காணுது
ஓடிப் பெருங்கை மதவேழம்

அழைத்துத் திரிந்தங்கு உறங்கும்
சாரல் அண்ணு மலையாரே.

—சம்பந்தர்

இழைத்த: மெலிந்த. விடை: காளை. தரியார்: பகைவர். பிழைத்த: தவறிப்போன. பிடி: பெண்யானை. மதவேழம்: மதம்சொரியும் ஆண்யானை.

Koviloor Digital Library

எனைத்தொர் ஊழி அடியார்
ஏத்த இமையோர் பெருமானுர்;

நினைத்துத் தொழுவார் பாவம்
தீர்க்கும் நிமலர் உறைகோயில்,

கனைத்த மேதி காணுது
ஆயன் கைமேல் குழல்ஊத

அனைத்தும் சென்று திரளும்
சாரல் அண்ணு மலையாரே.

—சம்பந்தர்

எனைத்தொர் ஊழி: எல்லா ஊழிக்காலத்தும். மேதி: எருமை. ஆயன்: இடையன். குழல்: புல்லாங்குழல். திரளும்: சேரும்.

Koviloor Digital Library

தேடிக் காணார் திருமால்
பிரமன் தேவர் பெருமானை;

முடி ஓங்கி முதுவேய்
உகுத்த முத்தம் பலகொண்டு

கூடிக் குறவர் மடவார்
குவித்துக் கொள்ள வம்மின்என்று

ஆடிப் பாடி அளக்கும்
சாரல் அண்ணா மலையாரே.

—சம்பந்தர்

முதுவேய்: முதிர்ந்த மூங்கில். உகுத்தமுத்தம்: சிந்திய முத்துக்கள். குறவர் மடவார்: குறப்பெண்கள். வம்மின்: வருக.

Koviloor Digital Library

அல்லாடு அரவம் இயங்கும்
சாரல் அண்ணா மலையாரை

நல்லார் பரவப் படுவான்
காழி ஞான சம்பந்தன்,

சொல்லால் மலிந்த பாடல்
ஆன பத்தும் இவைகற்று

வல்லார் எல்லாம் வானோர்
வணங்க மன்னி வாழ்வாரே.

—சம்பந்தர்

அல்ஆடு: இரவில் ஆடும். அரவம்: பாம்பு. மன்னி: நிலைபெற்று.

Koviloor Digital Library

ஓதிமா மலர்கள் தூவி
உமையவள் பங்கா! மிக்க

சோதியே! துளங்கும் எண்தோள்
சுடர்மழுப் படையி னானே!

ஆதியே! அமரர் கோவே!
அணிஅணா மலையு ளானே!

நீதியால் நின்னை அல்லால்
நினையுமா நினைவி லேனே.

—அப்பர்

ஓதி: பாடி. துளங்கும்: விளங்கும். அணி: அழகு. நினையுமா: நினைக்கும் ஆற்றல்.

Koviloor Digital Library

பைம்பொனே! பவளக் குன்றே!
பரமனே! பால்வெண் ணீற்றாய்!

செம்பொனே! மலர்செய் பாதா!
சீர்தரு மணியே! மிக்க

அம்பொனே! கொழித்து வீழும்
அணிஅணா மலையு ளானே!

என்பொனே! உன்னை அல்லால்
ஏதுநான் நினைவி லேனே.

—அப்பர்

மலர்செய்பாதா: பூப்போன்ற திருவடியை உடையவனே.

Koviloor Digital Library

பிறைஅணி முடியி னானே!
பிஞ்ஞகா! பெண்ஓர் பாகா!

மறைவலா! இறைவா! வண்டார்
கொன்றையாய்! வாம தேவா!

அறைகழல் அமரர் ஏத்தும்
அணிஅணா மலையு ளானே!

இறைவனே! உன்னை அல்லால்
யாதும்நான் நினைவி லேனே.

—அப்பர்

பிறை: திங்கள். பிஞ்ஞகன்: தலைக்கோலம் உடையவன்.
அறைசழல்: ஒலிக்கின்ற வீரக்கழல்.

Koviloor Digital Library

பார்த்தனுக்கு அன்று நல்கிப்
பாசுப தத்தை ஈந்தாய்!

நீர்த்ததும்பு உலாவு கங்கை
நெடுமுடி நிலாவ வைத்தாய்!

ஆர்த்துவந்து ஈண்டு கொண்டல்
அணிஅணு மலையு ளானே!

தீர்த்தனே! நின்றன் பாதத்
திறமலால் திறமி லேனே.

—அப்பர்

பார்த்தன்: அருச்சுனன். பாசுபதம்: ஓர் அத்திரம். கொண்டல்: மேகம். தீர்த்தன்: புனிதமானவன்.

Koviloor Digital Library

இரக்கமொன்று யாதும் இல்லாக்
காலனைக் கடிந்த எம்மான்!
உரத்தினால் வரையை ஊக்க
ஒருவிரல் நுதியி னாலே
அரக்கனை நெரித்த அண்ணா
மலைஉளாய்! அமரர் ஏறே!
சிரத்தினால் வணங்கி ஏத்தித்
திருவடி மறப்பி லேனே.

—அப்பர்

உரம்: ஆற்றல். வரை: கைலை. ஊக்க: தூக்க. நுதி: நுனி. அரக்கன்: இராவணன்.

Koviloor Digital Library

வட்ட னொம்மதி
சூடியை வானவர்

சிட்ட னத்திரு
அண்ணா மலையனை

இட்ட னஇகழ்ந்-
-தார்புரம் மூன்றையும்

அட்ட னஅடி-
-யேன்மறந்து உய்வெனே.

—அப்பர்

வட்டன்: அழகுடையவன். சிட்டன்: சிறந்தவன்.
இட்டன்: விருப்பமானவன். அட்டன்: அழித்தவன்.

Koviloor Digital Library

வான ஊம்மதி
சூடிய மைந்தனைத்

தேன ஊத்திரு
அண்ணு மலையனே

ஏன ஊஇகழ்ந்-
-தார்புரம் மூன்றெய்த

ஆன ஊஅடி-
-யேன்மறந்து உய்வெனே.

—அப்பர்

வானன்: மேலானவன். தேனன்: இனிக்கின்றவன். ஏனன்: பன்றிவடிவானவன். ஆனன்: எல்லாம் ஆனவன்.

Koviloor Digital Library

மின்ன னைவினை
தீர்த்தெனை ஆட்கொண்ட

தென்ன னைத்திரு
அண்ணா மலையனை

என்ன னைஇகழ்ந்-
-தார்புரம் மூன்றெய்த

அன்ன னைஅடி-
-யேன்மறந்து உய்வெனோ.

—அப்பர்

மின்னன்: ஒளிவடிவானவன். தென்னன்: தென்னாடுடைய சிவன். என்னன்: என்னுடையவன்.

Koviloor Digital Library

வீர னைவிடம்
உண்டனை விண்ணவர்

தீர னைத்திரு
அண்ணு மலையனை

ஊர னைஉண-
-ரார்புரம் மூன்றெய்த

ஆர னைஅடி-
-யேன்மறந்து உய்வனோ.

—அப்பர்

விடம்உண்டவன்: நஞ்சைக் குடித்தவன். ஆரன்: மாலையை அணிந்தவன்.

Koviloor Digital Library

அரக்க னையல-
-றவ்விரல் ஊன்றிய

திருத்த னைத்திரு
அண்ணா மலையனை

இரக்க மாய்என்
உடலுறு நோய்களைத்

துரக்க னைத்தொண்ட-
-னேன்மறந்து உய்வெனோ.

—அப்பர்

அரக்கன்: இராவணன். திருத்தன்: திருத்தமானவன். துரக்கன்: ஓட்டியவன்.

Koviloor Digital Library

பட்டி ஏறுஉகந்து
ஏறிப் பலஇலம்

இட்ட மாக
இரந்துண்டு உழிதரும்

அட்ட மூர்த்திஅண்
ணுமலை கைதொழக்

கெட்டுப் போம்வினை
கேடில்லை காண்மினே.

—அப்பர்

பட்டிஏறு: காளை. இலம்: வீடு. இட்டம்: விருப்பம். இரந்து: பிச்சை ஏற்று. உழிதரும்: திரியும்.

Koviloor Digital Library

பாடிச் சென்று
    பலிக்குஎன்று நின்றவர்

ஓடிப் போயினர்;
    செய்வதொன்று என்கொலோ?

ஆடிப் பாடிஅண்
    ணாமலை கைதொழ

ஓடிப் போகும்நம்
    மேலை வினைகளே.

—அப்பர்

பலிக்கு: பிச்சைக்கு. ஓடிப்போயினர்: மறைந்து விட்டார்.

Koviloor Digital Library

கோணிக் கொண்டையர்
வேடமுன் கொண்டவர்

பாணி நட்டங்கள்
ஆடும் பரமனுர்

ஆணிப் பொன்னின்அண்
ணுமலை கைதொழப்

பேணி நின்ற
பெருவினை போகுமே.

—அப்பர்

கோணிக்கொண்டையர்: வேடுவர். வேடம்: வடிவம். பாணி: கை.

Koviloor Digital Library

கண்டம் தான்கறுத்-
-தான்காலன் ஆருயிர்

பண்டு கால்கொடு
பாய்ந்த பரமனுர்

அண்டத்து ஓங்கும்அண்
ணுமலை கைதொழ

விண்டு போகும்நம்
மேலை வினைகளே.

—அப்பர்

கண்டம்: கழுத்து.

Koviloor Digital Library

மறையி ஞெனெடு
மாலவன் காண்கிலா

நிறையும் நீர்மையுள்
நின்றருள் செய்தவன்

உறையும் மாண்பின்அண்
ணமலை கைதொழப்

பறையும் நாம்செய்த
பாவங்க ளானவே.

—அப்பர்

மறையினுன்: பிரமன். பறையும்: அழியும்.

Koviloor Digital Library

நாதர் மருவும் திருமலைகள்
நாடும் பதிகள் பலமிகவும்

காதல் கூரச் சென்றிறைஞ்சிக்
கலந்த இசைவண் தமிழ்பாடி,

மாதொர் பாகர் அருளாலே
வடபால் நோக்கி வாகீசர்

ஆதி தேவர் அமர்ந்ததிரு
அண்ணு மலையை நண்ணினர்.

—சேக்கிழார்

நாதர்: சிவபெருமான். பதி: ஊர். கூர: மிக. வாகீசர்: திருநாவுக்கரசர். இதுமுதல் மூன்று பாடல் திருநாவுக்கரசர் திருவண்ணுமலையை வணங்கிய முறை.

Koviloor Digital Library

செங்கண் விடையார் திருஅண்ணா-
-மலையைத் தொழுது வலங்கொண்டு

துங்க வரையின் மிசைஏறித்
தொண்டர் தொழும்புக்கு எதிர்நிற்கும்

அங்கண் அரசைத் தொழுதெழுந்து
திளைத்துத் திருநா வுக்கரசர்

தங்கு பிறப்பே வீட்டினுக்கு
மேலாம் பெருமை சாதித்தார்.

—சேக்கிழார்

செங்கண்விடையார்: சிவந்த கண்ணையுடைய காளை ஏறும் சிவபெருமான். துங்கவரை: தூய்மையான மலை. திளைத்து: அனுபவித்து. தங்கு பிறப்பு. மனிதப்பிறவி. 'குனித்தபுருவமும்'என்ற தேவாரத்தின் கருத்து.

Koviloor Digital Library

அண்ணா மலைமேல் அணிமலையை
ஆரா அன்பின் அடியவர்தம்

கண்ணார் அமுதை விண்ணோரைக்
காக்கக் கடலில் வந்தெழுந்த

உண்ணா நஞ்சம் உண்டானைக்
கும்பிட்டு உருகும் சிந்தையுடன்

பண்ணார் பதிகத் தமிழ்பாடிப்
பணிந்து பரவிப் பணிசெய்தார்

—சேக்கிழார்

அணிமலை: அழகிய மலைபோன்ற கடவுள். ஆரா: குறையாத. கண்ணார்அமுது: கண்நிறைந்தஅமுதம். உண்ணாநஞ்சம்: பிறர் உண்ண அஞ்சிய விடம்.

Koviloor Digital Library

அண்ணு மலேஅங்கு அமரர்பிரா(ன்)
வடிவு போன்று தோன்றுதலும்

கண்ணுல் பருகிக் கைதொழு(து)
கலந்து போற்றும் காதலிஞல்

''உண்ணு முலே''யாள் எனும்பதிகம்
பாடித் தொண்டர் உடன்போந்து

தெண்ணீர் முடியார் திருஅண்ணு-
-மலேயைச் சென்று சேர்வுற்ருர்.

—சேக்கிழார்

கண்ணுல்பருகி: கண்ணுல்மொண்டு ''உண்ணுமுலேயாள் எனும்பதிகம்" ''உண்ணுமுலே உமையாளொடு'' எனும் தேவாரப்பதிகம். தெண்ணீர்முடியார் கங்கையை முடியில் தரித்தவர். இதுமுதல் மூன்று பாடல் திருஞானசம்பந்தர் திருவண்ணுமலேயை வணங்கிய முறை.

Koviloor Digital Library

அங்கண் அணைவார் பணிந்தெழுந்து
போற்றி செய்துஅம் மலைமீது

தங்கு விருப்பில் வீற்றிருந்தார்
தாள்தா மரைகள் தம்முடிமேல்

பொங்கும் ஆர்வத் தொடும்புனைந்து
புளகம் மலர்ந்த திருமேனி

எங்கும் ஆகிக் கண்பொழியும்
இன்ப அருவி பெருக்கினுர்

—சேக்கிழார்

அங்கண்: அவ்விடத்து. அம்மலை: அந்தஅண்ணுமலை.
புனைந்து: அணிந்து. புளகம்: மெய்ச்சிலிர்ப்பு.

Koviloor Digital Library

ஆதி மூர்த்தி கழல்வணங்கி,
அங்கண் இனிதின் அமருநாள்

பூத நாத ரவர்தம்மைப்
"பூவார் மல"ரால் போற்றிசைத்துக்

காத லால்அத் திருமலையிற்
சிலநாள் வைகிக் கமழ்கொன்றை

வேத கீதர் திருப்பதிகள்
பிறவும் பணியும் விருப்புறுவார்.

—சேக்கிழார்

பூவார்மலரால்: "பூவார்மலர்கொண்டு" என்னும் தேவாரம் இசைத்து. அத்திருமலையில் சிலநாள்வைகி: அவ்வண்ணாமலையில் சிலநாட்கள் தங்கி.

Koviloor Digital Library

பெற்றாள்சகத்து அண்டங்கள்
அனைத்தும்,அவை பெற்றும்
முற்றாமுகிழ் முலையாளொடு
முக்கண்ணர் விரும்பும்
பற்றும்என மிக்கோர்இகழ்
பற்றுஒன்றினும் உண்மை
கற்றார்தொழும் அருணாசலம்
அன்போடுகை தொழுதான்.

—வில்லிப்புத்தூராழ்வார்

பெற்றாள் சகத்து அண்டங்கள்: எல்லா உலகத்தையும் ஈன்றவள். முற்றாமுகிழ்முலையாள்: உண்ணா முலையாள். முக்கண்ணர்; மூன்றுகண் படைத்த அண்ணாமலையார். மிக்கோர் இகழ்பற்று: மேலோர் ஒதுக்கும் பாசம். உண்மை கற்றார்: மெய்யறிவு கைவரப்பெற்றவர். அருணாசலம்: அண்ணாமலை. தலயாத்திரைவந்த பார்த்தன் திருவண்ணாமலையைத் தொழுதான்.

Koviloor Digital Library

பொல்லாத என்பிறவிப்
புண்ணுக்கு ஒருமருந்து

சொல்லாய்! அருணகிரிச்
சோதியே!—எல்லாரும்

போற்ற நடம்புரியும்
புண்ணியா! நான்மறைகள்

ஏற்றும் சிவலோக னே!

—குகைநமச்சிவாயர்

புண்: உடம்பு. அருணகிரி: அண்ணுமலை.

Koviloor Digital Library

பூமாலை சாத்திப்
புவிபுகழ்சோ ணாசலற்குப்

பாமாலை சூட்டிப்
பலகாலும்—நாமாலை

பண்ணா யிரம்பாடிப்
பார்த்திருக்க நாயேற்குக்

கண்ணா யிரம்வேண்டும் காண்.

—குகைநமச்சிவாயர்

சோணசலம்: அண்ணமலை. பலகாலும்: பலமுறையும்.

Koviloor Digital Library

பேசுமவர் வஞ்சப்
பிறப்பறுக்கும் என்றுஉலகில்

வீசுபுகழ்ச் சோணகிரி
வித்தகா!—மாசிலா

அண்ணு மலையானே!
அன்னைவயிற்று என்னைஉருப்

பண்ணுமல் ஐயா!கண் பார்.

—குருநமச்சிவாயர்

சோணகிரி: அண்ணுமலை. உருப்பண்ணுமல்: பிறவி தாராமல்.

Koviloor Digital Library

கருணால யா! நின்
கழல்பணிய மாட்டேன்

அருணாச லாஎன்று
அழையேன்—மரணந்த

காலத்தில் ஓதும்
கருத்தறியேன்; கண்ணேஉன் தன்

கோலத்தில் வையேன் குறித்து.

—குருநமச்சிவாயர்

கருணாலயா: அருட்கோயிலாய். அருணாசலா: அண்ணாமலையாய். மரணந்தகாலத்தில்: உடல்விடும் போது.

Koviloor Digital Library

ஆதிநடம் ஆடுமலை;
அன்றுஇருவர் தேடுமலை;

சோதிமதி ஆடுஅரவம்
சூடுமலை;—நீதி

தழைக்குமலை; ஞானத்
தபோதனரை 'வா'என்று

அழைக்குமலை அண்ணு மலை

—குருநமச்சிவாயர்

ஆதி: முதற்கடவுள். இருவர்: பிரமன், மால்.
சோதிமதி: ஒளித்திங்கள்.

Koviloor Digital Library

கூற்றை உதைத்தமலை;
கோமாறன் கூடல்வைகை

ஆற்றை அடைத்தமலை;
ஆரூரன்—போற்றச்

சிறந்தமலை; தீவினையேன்
செய்தகுறை எல்லாம்

மறந்தமலை, அண்ணா மலை.

—குருநமச்சிவாயர்

கூற்று: எமன். கோமாறன்: பாண்டிய மன்னன்.
கூடல்: மதுரை, ஆரூரன்: சுந்தரமூர்த்திகள்.

Koviloor Digital Library

கண்டம் கரியமலை;
கண்மூன்று உடையமலை;

அண்டர்எலாம் போற்றற்கு
அரியமலை;—தொண்டருக்குத்

தோற்றுமலை: நாளும்
தொழுவோர் எழுபிறப்பை

மாற்றுமலை அண்ணா மலை.

—குருநமச்சிவாயர்

கண்டம்: கழுத்து. கரிய: கறுத்த. அண்டர்: தேவர்.

Koviloor Digital Library

சத்திக்கு ஒருபாகம்
தான்கொடுத்து நின்றமலை;

முத்திக்கு வித்தாய்
முளைத்தமலை;—எத்திசையும்

போற்றுமலை; போற்றிப்
புகழ்வார் எழுபிறப்பை

மாற்றுமலை அண்ணா மலை;

—குருநமச்சிவாயர்

சத்தி: அம்பிகை. எழுபிறப்பைமாற்றும்மலை: தோன்றும் பிறவியை அறுக்கும் சிவபெருமான்.

Koviloor Digital Library

நாதன்அருள் ஆன
நமச்சிவா யன்கனிவாய்

ஓதுதமிழ் மாலை
உகந்தமலை;—பாதிமதி

சூடுமலை; பத்திசெயும்
தொண்டருடன் கூடிவிளை-

யாடுமலை அண்ணா மலை.

—குருநமச்சிவாயர்

நமச்சிவாயன்கனிவாய் ஓதுதமிழ்மாலை உகந்தமலை: குருநமச்சிவாயருடைய இனிக்கும் வாயால் பாடும் தமிழ்ப்பாக்களை விரும்பி ஏற்ற மலை.

Koviloor Digital Library

நீலமலை தேடரிதாய்
நின்றமலை; நின்றதழல்

கோலமலை; மன்றில்
குனிக்குமலை;—மூலமலை;

அந்தமலை சுந்தரற்காய்
அன்றுஇரவில் தூதுபோய்

வந்தமலை அண்ணா மலை.

—குருநமச்சிவாயர்

நீலமலை: திருமால். தழற்கோலமலை: நெருப்புப்பிழம்பான அழகிய மலை. மன்றில் குனிக்கும்மலை: அம்பலத்தே ஆடும்மலை. மூலமலை: ஆதிமலை. சுந்தரர்: சுந்தரமூர்த்திசுவாமிகள்.

Koviloor Digital Library

பண்ணடுத்த கூடற்
　பழம்பதியில் பிட்டமுதை

உண்ணடுத்து, வைகை
　உடையாமல்—மண்ணெடுத்துப்

போடுமலை; சந்ததமும்
　பொன்னம் பலத்தில்நடம்

ஆடுமலை; அண்ணா மலை.

—குருநமச்சிவாயர்

பண்ணடுத்தகூடல்: இசைஏற்ற மதுரை. 'பண்சுமந்த பாடல்' என்ற திருவாசகம் ஈண்டு நினையத்தக்கது. சந்ததமும்: எப்பொழுதும்.

Koviloor Digital Library

பொருந்து,தலைச் சங்கப்
புலவர்தமைப் போலே

விரிந்தபுகழ்க் கூடலிலே
மேவி,—அருந்தமிழை

ஆய்ந்தமலை; பார்மீதில்
ஐந்தெழுத்தன் ஆகிவந்து

வாய்ந்தமலை; அண்ணு மலை.

—குருநமச்சிவாயர்

தலைச்சங்கம்: முதற்சங்கம். ஆய்ந்த: ஆராய்ந்த.
ஐந்தெழுத்தன்: நமச்சிவாயன்.

Koviloor Digital Library

அறுகும் மதியும்
  அணிமுடிமேல் கூடல்

மறுகு தனில்அடியார்
  வாழ—விறகு

சுமந்தமலே; போற்றிசெயும்
  தொண்டர்அகம் தோறும்

அமர்ந்தமலே அண்ணு மலே.

—குருநமச்சிவாயர்

அறுகு: அறுகம்புல். அணி: அழகு. மறுகு: வீதி. விறகுசுமந்தமலே: விறகுவிற்ற கடவுள்.

Koviloor Digital Library

நஞ்சுஅணியும் கண்டமலை;
நாளும் அடியவர்தம்

வஞ்சவினை தான்அறுக்க
வந்தமலை;—நெஞ்சை

இளக்குமலை; அன்பர்க்கு
இனியபே ரின்பம்

வளர்க்குமலை; அண்ணா மலை.

—குருநமச்சிவாயர்

இளக்கும்: உருக்கும்.

Koviloor Digital Library

பச்சைநிறம் தாஞகிப்
பாதிவடி வானமலே;

கச்சையெனக் கட்செவியைக்
கட்டுமலே;—நிச்சயமாய்

மாளும் அடியேனே
மாளா வகைஅருளி

ஆளுமலே; அண்ணு மலே.

—குருநமச்சிவாயர்

பச்சைநிறம்: அம்பிகையின் பகுதி. கச்சை: இடுப்பில் கட்டும் கயிறு. கட்செவி: பாம்பு.

Koviloor Digital Library

இரவிகள் சந்திரர், வயிரவர், விஞ்சையர்,
இமையவர், எண்திசையோர்,

உரகர், அருந்தவர், முனிவரர், பங்கயர்,
உவண நெடுங்கொடியோர்

பரவி நெருங்கலில் உலக நிறைந்தவர்
பணியும் இடங்கிடையாது

அரகர என்பது கடலின் முழங்கியது
அருணை வளம்பதியே.

—சைவ எல்லப்ப நாவலர்

விஞ்சையர்: வித்தியாதரர். எண்திசையோர்: அட்டதிக்குப் பாலகர். உரகர்: நாகர். பங்கயர்: பிரமர்கள். உவணநெடுங்கொடியோர்: நாராயணர்கள். பரவி: வழிபட்டு. அரகர: ஒலிக்குறிப்பு. அருணை: திருவண்ணாமலை.

Koviloor Digital Library

ஒருமானைக் கரத்தினில்வைத்து, ஒருமானைச்
சிரத்தினில்வைத்து, உலகம் ஏழும்

தருமானை இடத்தினில்வைத்து, அருள்வானை,
பவளநெடும் சயிலம் போல

வரும்ஆனை முகத்தானை அளித்தானை,
பொரும்ஆனை மகிழ ஏறும்

பெருமானை, அருணகிரிப் பெம்மானை,
அடிபணிந்து பிறவி தீர்ப்பாம்.

—சைவ எல்லப்ப நாவலர்

முதல்மான்: மானாகிய உயிர்ப்பிராணி. இரண்டாவது மான்: மானனைய கங்கையாள். உலகம் ஏழும் தருமான்: உமையவள். சயிலம்: மலை. ஆனை முகத்தான்: விநாயகக் கடவுள். பொரும் ஆன்: போர்க்காளை. பெருமான்: சிவபெருமான்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

பாட்டு முதற்குறிப்பு அகராதி

தொடர் எண்	பாடல்	பாட்டு எண்	தொடர் எண்	பாடல்	பாட்டு எண்
1	அங்கண்	32	14	எனைத்தொர்	10
2	அண்ணுமலை அங்கு	31	15	ஒரு மானை	51
3	அண்ணுமலை மேல்	30	16	ஓதிமா மலர்கள்	13
4	அண்ணுமலையான்	1	17	கண்டம் கரிய	41
5	அரக்கனை	22	18	கண்டம் தான்	26
6	அல்லாடு	12	19	கருணலயா	38
7	அறுகும்	47	20	கூற்றை	40
8	ஆதிநடம்	39	21	கோணி	25
9	ஆதிமூர்த்தி	33	22	சத்திக்கு	42
10	இரக்கம் ஒன்று	17	23	செங்கண்	29
11	இரவிகள்	50	24	தேடிக்காணர்	11
12	இழைத்த	9	25	தேமாங்கனி	4
13	உண்ணுமுலை	3	26	நஞ்சு அணியும்	48

Koviloor Digital Library

பாட்டு முதற்குறிப்பு அகராதி (தொடர்ச்சி)

தொடர் எண்	பாடல்	பாட்டு எண்	தொடர் எண்	பாடல்	பாட்டு எண்
27	நாதர்	28	40	பேசுமவர்	37
28	நாதன் அருள்	43	41	பைம்பொனே	14
29	நீலமலை	44	42	பொருந்து	46
30	பச்சை நிறம்	49	43	பொல்லாத	35
31	பட்டி ஏறு	23	44	மறையிருநெடு	27
32	பண்ணடுத்த	45	45	மின்னனை	20
33	பாடிச்சென்று	24	46	வட்டனை	18
34	பார்த்தனுக்கு	16	47	வானனை	19
35	பிறை அணி	15	48	விண்ணுளும்	2
36	பூ மாலை	36	49	விளவார்கனி	6
37	பூவார் மலர்	8	50	வீரனை	21
38	பெருகும் புனல்	5	51	வெம்புந்திய	7
39	பெற்றுள்	34			

Koviloor Digital Library

Koviloor Digital Library

திருமகள் அச்சகம்
காரைக்குடி.

Koviloor Digital Library

Koviloor Digital Library